### தாம்பரம் – வேளச்சேரி சாலை தி.மு.க. ஆட்சியிலேயே

# மேஜர் முகுந்த் வரதராஜன் பெயரில் மாற்றம்!

## Copy Past த.வெ.க. அரசுக்கு தி.மு.க. ஐ.டி.விங் கண்டனம்!

சென்னை,ஜூன்.26-

அசோக சக்கர விருது பெற்ற நம் மண்ணின் வீரத்திருமகன் மேஜர் முகுந்த் வரதராஜன் அவர்களின் தியாகத்தைப் போற்றும் வகையில், கிழக்கு தாம்பரம் - வேளச்சேரி சாலையை அவர் பெயரில் மாற்றுவதற்கான முழு அடித்தளமும் முந்தைய தி.மு.க. ஆட்சியிலேயே போடப்பட்டுவிட்டது என்பதுதான் யாராலும் மறைக்க முடியாத உண்மை!


2025 ஆகஸ்ட் மாதமே இதற்கான முன்மொழிவு செய்யப்பட்டு, அக்டோபர் 23, 2025 அன்றே தி.மு.க. அரசின் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையால் இதற்கான அதிகாரப்பூர்வ அனுமதியும் வழங்கப்பட்டுவிட்டது!

ஆனால், சொந்தமாக எதையும் யோசிக்கத் துப்பில்லாத இந்த Copy Paste தவெக அரசு, முந்தைய தி.மு.க. அரசின் முடிவுகளுக்குத் தங்கள் கட்சியின் ஸ்டிக்கரை ஒட்டி "நாங்கள் தான் செய்தோம்" என்று கூச்சமே இல்லாமல் வெட்கங்கெட்ட தனமாக மார்தட்டிக் கொள்கிறது!

மேஜர் முகுந்த் அவர்களின் வீரத்தின் மீது தி.மு.க. அரசுக்கு இருந்த உண்மையான மரியாதையை, இன்று தங்கள் மலிவான சுய விளம்பரத்திற்காகப் பயன்படுத்தும் இந்த Sofa Model முதலமைச்சரின் பித்தலாட்டத்தை மக்கள் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்!

ஆட்சிக்கு வந்து எத்தனை மாதங்கள் ஆகியும், இன்னும் முந்தைய அரசு கொண்டு வந்த திட்டங்களுக்கு வீட்டில் இருந்து கத்திரிக்கோல் கொண்டு வந்து ரிப்பன் வெட்டுவதும், ஸ்டிக்கர் ஒட்டுவதும்தானா உங்களது மாற்று அரசியல்?

அடுத்தவர் உழைப்பில் குளிர் காய்வதை எப்போது தான் நிறுத்தப் போகிறீர்கள் Sticker CM? என தி.மு.க. ஐ.டி. விங் கண்டனம் தெரிவித்துள்ளது.



NDTV GET APP

Live TV Latest India Videos World Health

The Director of Municipal Administration in August 2025 had written a letter to the Tambaram Council to pass a resolution with a proposal to rename Tambaram - Vellachery Road as 'Major Mukund Varadharajan Road'.

Subsequently, permission was sought from the Principal Secretary to Government, Municipal Administration and Water Supply Department, to place the proposal before the Corporation Council for final approval. The State Government, through a letter dated October 23, 2025, granted permission to proceed with the resolution.

### முதல்வர் விஜய் தனது முதுகில் அழுக்கு மூட்டைகளை வைத்துக் கொண்டு

# தி.மு.க.வைப் பற்றி பேச என்ன தகுதியுள்ளது?

## முன்னாள் அமைச்சர் பி.கீதா ஜீவன் கண்டனம்!

தூத்துக்குடி, ஜூன் 26-

தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக செயலாளர் - முன்னாள் அமைச்சர் பி.கீதாஜீவன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:



தமிழ்நாடு சட்டசபையில் 23ம் தேதி ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது முதல்வர் விஜய் நிகழ்த்திய உரையின் சாராம்சம் ஆணவத்தின் உச்சம் அதிகாரத் திமிரின் வெளிப்பாடு ஆகும்.

முந்தைய நாள் பேசிய சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தமிழக வெற்றிக் கழக அரசின் மீதான ஆக்கப்பூர்வமான விமர்சனங்களை முன்வைத்தார். மின்வெட்டு - விவசாயிகள் பிரச்சினை - சீரழிந்து வரும் சட்டம் ஒழுங்கு என நியாயமான கேள்விகளை எழுப்பினார். பாலியல் குற்றங்களில் ஈடுபட்ட த.வெ.க.வினரைக்கூட ஆதாரங்களுடன் குற்றம்சாட்டினார். எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பிய கேள்விகளுக்கு தமிழ்நாடு முதல்வர் பதிலளிப்பார் என்றே எதிர்பார்த்தோம்.

ஆனால், முதல்வருக்கான மாண்புகளை மறந்து ஸ்டாண்ட்-அப் காமெடியன்போல உளறிக் கொட்டியிருக்கிறார் முதல்வர் விஜய். பதிலுரை முழுக்கவே ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளும் பிதற்றல்களுமே நிறைந்திருந்தன. ஒரே மாதத்தில் 150 பாலியல் குற்றங்கள், கொலை, கொள்ளை, என சட்டம் ஒழுங்கு சீரழிவு, மின்சாரத்துறை செயலிழப்பு, விவசாயி கள் போராட்டம் உள்ளிட்டற்றவர்களுக்கு பதில்சொல்ல வக்கற்ற முதல்வர் திமுக மீது அவதூறை அள்ளித் தெளித்திருக்கிறார். பா.ஜ.க.வுடன் இணக்கமாக இருப்போம் எனக் கூறிவிட்டு, திமுகவை குறிவைத்து தாக்குவதிலேயே "நீங்கள் யார்" என்பது அம்பலப்பட்டுவிட்டது. எதிர்க்கட்சித் தலைவர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் எழுப்பிய எந்த கேள்விக்கும் பதில் அளிக்கவில்லை.

அதிலும் எங்கள் திமுக தலைவர் தளபதியார் குறித்து முதல்வர் விஜய் பேசி நடித்திருப்பது ஆணவத்தின் உச்சம்.. அதிகாரத் திமிரின் வெளிப்பாடு. 50 ஆண்டுகளுக்கு மேல் பொது வாழ்க்கையில் உள்ள தளபதியார் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கை முறை மற்றும் தமிழ்நாட்டின் அனைத்து பகுதிகளையும் அறிந்தவர் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் வழியிலே தமிழ்நாட்டை வளர்ச்சி அடைய செய்தவர் எங்கள் தலைவர் ஆவார். ஒன்றரை கோடி தொண்டர்களை கொண்ட திமுகழக தலைவர் ஆவார். தமிழ்நாட்டில் ஜனாதிபதி ஆட்சி வரக்கூடாது என்பதற்காகத்தான் அன்று கூட்டணி கட்சிகளை த.வெ.க.விற்கு ஆதரவு தரக்கூறினார் என்பதை அனைவரும் அறிவர்.

சபையில் இல்லாத வரை குறித்து இதுவரை சட்டமன்றத்தில் இவ்வளவு அநாகரிகமாக பேசப்பட்டதில்லைஎல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருக்கும் மக்கள் பதில் தருவார்கள்.

கழகத் தலைவர் தளபதியாரைப் பற்றி முதலமைச்சரின் தரம் தாழ்ந்த பேச்சு மற்றும் திமுகவின் மீது அவருடைய பொய்க் குற்றச்சாட்டுகள் அனைத்தும் கண்டனத்துக்குரியது. மாண்பையும் மரபையும் கட்டிக் காக்க வேண்டும் என்ற எங்கள் தலைவரின் உத்தரவின் பெயரிலேயே மிகுந்த கண்ணியத்துடன் விமர்சிக்கிறோம். உங்கள் பாணியில் எங்களுக்கும் பேசத் தெரியாமல் இல்லை என்பதை நினைவில் கொள்க. தனது முதுகில் அழுக்குமூட்டைகளை வைத்துக்கொண்டு திமுகவை பற்றி பேசுவதற்கு என்ன தகுதி இருக்கிறது முதல்வருக்கு.

முதல்வர் விஜய் அவர்களே. இந்த வெற்றுக் வாய் சவடால்களுக்கு அஞ்சும் இயக்கம் அல்ல திராவிட முன்னேற்ற கழகம்.

எனவே உங்கள் வசனங்களை சினிமா ஷூட்டிங்கோடு நிறுத்திக் கொள்ளுங்கள்.

சட்டமன்றத்துக்கென்று ஒரு மாண்பு இருக்கிறது; அவற்றை மறந்து சிரித்து, விசிலடிக்கும் பொழுதுபோக்கு மன்றமாக சட்டமன்றத்தை மாற்றியிருக்கிறார் முதல்வர் விஜய்.

அமைச்சர்கள் டூயட் பாடல்களுக்கு ஆடுகிறார்கள்.. எம்எல்ஏக்கள் விசில் அடிக்கிறார்கள்.. முதல்வர் சட்டமன்றத்தில் நாடகத்தை அரங்கேற்றுகிறார். இந்த ஆட்சியில் இன்னும் என்னென்ன கொடுமைகளையெல்லாம் பார்க்கப் போகிறோம் என்பதை நினைக்கும்போது வேதனையாக இருக்கிறது! என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.



திருவாரூர் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் மறைந்த வீரா.தேசபந்து அவர்களின் இல்லத்திற்கும், மன்னார்குடி அருகே காரக்கோட்டையில் வாகன விபத்தில் உயிரிழந்த பள்ளிக் குழந்தைகளின் இல்லத்திற்கும் சென்ற முன்னாள் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா , இழப்பால் துயருற்ற அவர்களது குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறி தேவையான உதவிகளை மேற்கொண்டார். மாநில,மாவட்ட,ஒன்றிய கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் உடன் இருந்தனர்.

### கடும் எதிர்ப்பின் காரணமாக – என்.எல்.சி. நிறுவனத்தின்

# 3% பங்கு விற்பனை முடிவை திரும்பப் பெறுக!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தலின்படி

## ஒன்றிய அரசுக்கு கனிமொழி கருணாநிதி எம்.பி. வலியுறுத்தி கடிதம்!

**சென்னை, ஜூன் 26 -**

**NLCIL நிறுவனத்தின் 3% பங்கு விற்பனை முடிவைத் திரும்பப் பெற ஒன்றிய அரசை வலியுறுத்த வேண்டும் என முன்னாள் அமைச்சரும் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதியின் உறுப்பினருமான சி.வெ.கணேசன் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் வைத்த கோரிக்கையையடுத்து, கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலில் கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள், ஒன்றிய நிலக்கரி மற்றும் சுரங்கத் துறை அமைச்சர் G.கிஷன் ரெட்டி அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.**



அதன் விவரம் வருமாறு:-

தமிழ்நாடு, கடலூர் மாவட்டம், நெய்வேலியில் அமைந்துள்ள, நிலக்கரி அமைச்சகத்தின் கீழுள்ள நவரத்னா பொதுத்துறை நிறுவனமான நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் (என்.எல்.சி) இந்தியா லிமிடெட் நிறுவனத்தில், 3% பங்குகளை விற்பனை செய்ய ஒன்றிய அரசு எடுத்துள்ள திடீர் முடிவு குறித்து தாங்கள் தலையிடக் கோரி இந்த மனு சமர்ப்பிக்கப்படுகிறது.

பங்கு விற்பனைக்கான இந்த முன்மொழிவானது ஊழியர்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் பொதுமக்களிடையே பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. நடப்பு நிதியாண்டில் என்.எல்.சி நிறுவனம் சுமார் ரூ.3,769 கோடி இலாபம் ஈட்டியுள்ள நிலையில், அதன் வலுவான நிதிச் செயல்பாடு மற்றும் இலாபத் தன்மையையும் மீறி இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. நிறுவனத்தின் தொடர்ச்சியான சிறப்பான செயல்பாடு மற்றும் மூலோபாய முக்கியத்துவத்தைக் கருத்தில் கொள்ளும்போது, இந்தத் முதலீட்டு விலக்கத்திற்கான காரணங்களும் நியாயங்களும் தெளிவாக இல்லை.

முன்னதாக என்.எல்.சி நிறுவனத்தில் அரசின் பங்குகளைக் குறைக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் கடும் எதிர்ப்பைச் சந்தித்தன என்பதை இங்கு நினைவு கூருவது பொருத்தமானது. கடந்த 2006ஆம் ஆண்டில், 10% பங்குகளை விற்பனை செய்யும் முன்மொழிவு, தொழிலாளர்கள், பொறியாளர்கள், அதிகாரிகள் மற்றும் பல்வேறு நலச் சங்கங்களின் பரவலான போராட்டங்களைத் தொடர்ந்து திரும்பப் பெறப்பட்டது. அதேபோல், 2013இல் 5% பங்கு விற்பனை முன்மொழியப்பட்டபோது, தமிழ்நாடு அரசு தலையிட்டு 3.56% பங்குகளை வாங்கியதன் மூலம் இந்நிறுவனத்தின் பொதுத் துறை தன்மையைப் பாதுகாக்க உதவியது.

இத்தகைய சூழ்நிலையில், தற்போது மேலும் 3% பங்குகளை விற்பனை செய்வதற்கான முடிவு, ஊழியர்கள் மற்றும் பொதுமக்களிடையே, இது படிப்படியாக அரசின் உரிமையைக் குறைத்து, இறுதியில் நிறுவனத்தைத் தனியார்மயமாக்குவதற்கு வழிவகுத்துவிடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

என்.எல்.சி நிறுவனத்தின் மூலோபாய முக்கியத்துவம், இலாபகரமான செயல்பாடுகள், பொருளாதாரம் மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கத்தில் அதன் கணிசமான பங்களிப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, என்.எல்.சி. இந்தியாலிமிடெட்நிறுவனத்தில் 3% பங்குகளைத் திரும்பப் பெறும் முன்மொழிவை மறுபரிசீலனை செய்து, அதனைத் திரும்பப் பெற வேண்டும் என்று அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்விவகாரத்தில் தங்களது அமைச்சகம் உடனடியாகத் தலையிட்டு, தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் வலியுறுத்தி உள்ளார்.

### திருவாரூர் வருகை தந்த தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு கொள்ளிடத்தில்

# மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. சார்பில் உற்சாக வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் தலைமையில்!

மயிலாடுதுறை, ஜூன். 26–

கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் திருவாரூரில் நடைபெறும் முன்னாள் அமைச்சர் உ. மதிவாணன் இல்ல திருமண விழாவில் கலந்து கொள்ள சென்னையில் இருந்து விழுப்புரம், கடலூர், சிதம்பரம் வழியாக நேற்று முந்தினம் இரவு (24ம் தேதி) திருவாரூர் சென்ற கழகத் தலைவர் தளபதி அவர்களுக்கு மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. சார்பில் மயிலாடுதுறை மாவட்ட எல்லையான கொள்ளிடத்தில் புறவழி சாலையில் அமைந்துள்ள கலைஞர் சிலை அருகே மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் தலைமையில் மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

வரவேற்பு நிகழ்ச்சியில் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் எம் பன்னீர்செல்வம், கழக கொள்கை பரப்பு துணை செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், விவசாய அணி மாநில துணை செயலாளர் ஆர். அருள்செல்லம், விவசாய தொழிலாளர் அணி மாநில துணை செயலாளர் ஜெக.வீரபாண்டியன், தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணை செயலாளர் பி.எம்.ஸ்ரீதர், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் இராம. இளங்கோவன், முத்து.மகேந்திரன், ஜி.என். ரவி, மாவட்ட கழக அமைத் தலைவர் கே.ஜி.சீனிவாசன், மாவட்டத் கழக பொருளாளர் மகா.அலெக்சாண்டர்,

மாவட்ட துணை செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, கண்ணகிபன்னீர், ஒன்றிய கழக செயலாளர்கள் செல்லசேது.ரவிக்குமார், ஏ.ஜி.ஜெ.பிரபாகர், மலர்விழிதிருமாவளவன், மூவலூர் எம்.மூர்த்தி, மங்கை எம்.சங்கர், ஏ.ஆர்.ராஜா, பி.எம்.அன்பழன், எம். அப்துல்மாலிக், அமிர்த.விஜயகுமார், என். இளையபெருமாள், கு.வைத்திய நாதன், ஞான. இமையநாதன், ப.முருகமணி, பஞ்சு.குமார், நகரக் கழக செயலாளர்கள் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், ம. சுப்பராயன், பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ். சுவாமிநாதன், பி.சிவதாஸ், ஜெ.கபிலன், நத்தம் ஏ.வின்சென்ட், பி.கென்னடி, சுபா நெடுஞ்செழியன், பேரூர் செயலாளர்கள் எம்.அன்புச் செழியன், எம்.சம்சுதீன்,எஸ்.கே. முத்துராஜா, அண்ணாதுரை

மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் எம்.கே. மருது, வெடி எஸ். பாலமுருகன், செல்வராஜ், வி. எஸ். பிரபாகர், இரா.மானோகரன், முத்து. குபேந்திரன், பெரு.வீரமணி, தீபா சத்தியேந்திரன், ராக்குமார், தன்ராஜ், சீர்காழி முன்னாள் ஒன்றிய செயலாளர் என்.சசிக்குமார், ஒன்றிய குழு முன்னாள் தலைவர்கள் தியாக .விஜயேஸ்வரன், முந்து. தேவேந்திரன், மகேந்திரன், ஜெயபிரகாஷ், பேரூராட்சி தலைவர்கள் சுகுணாசங்கரிகுமரவேல், கண்மணிஅறிவழகன், மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், கிளை , வார்டு கழக நிர்வாகிகள உள்ளிட்ட 3000த்திற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு கழக கொடியுடன் தலைவர் தளபதிக்கு மாபெரும் வரவேற்ப்பு வழங்கப்பட்டது அப்போது விண்ணை முட்ட தலைவர் தளபதி வாழ்க, வாழ்க என கோஷங்களை எழுப்பி உச்சாக வரவேற்ப்பு அளித்தனர்.

மயிலாடுதுறை மாவட்டம் கொள்ளிடத்தில் இருந்துகுமாரமங்கலம் வரை வழியில் நெடுங்க கழகத்தினரும் பொதுமக்களும் கூடி நின்று கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு என் முகத்துடன் வரவேற்று சால்வை, நூல்கள் வழங்கி எழுச்சிமிக்க வரவேற்பு அளித்தனர்.




கோவை வடவள்ளி காவல் நிலையத்தின் பெயர் பலகை மறையும் அளவுக்கு ஆளும் கட்சியின் பேனர்கள் வைக்கப்பட்டுள்ளன. கோவையில் தொடர்ந்து நடைபெறும் பல்வேறு சட்டம் – ஒழுங்கு பிரச்சினைகளை கட்டுப்படுத்த முடியாமல் இருக்கும் காவல்துறை தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான கட்டிடத்தில் உள்ள காவல்துறை அலுவலகத்தை த.வெ.க. கட்சி அலுவலகம் செயல்பட வாடகைக்கு கொடுத்துவிட்டதா ? என்று கோவை மாநகர் மாவட்ட கழக பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச்செல்வன் கேள்வி எழுப்பி உள்ளார்.



ஈரோடு மாநகராட்சி தூய்மைப் பணிகளை ஒப்பந்த அடிப்படையில் தனியாரிடம் ஒப்படைக்கக் கூடாது எனவும், மக்கள் நல்வாழ்வுத் துறையில் மக்களைத்தேடி மருத்துவ திட்டத்தில் 42 ஆயிரம் பேருக்கு ஊதிய உயர்வு வழங்கக்கோரியும், டாஸ்மாக் ஊழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி த.வெ.க. அரசின் செயல்பாட்டை கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் பல்வேறு அரசு துறைகளை சார்ந்தவர்கள் பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றக்கோரி தினமும் த.வெ.க. அரசை கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு ஈரோடு மாவட்ட ஆட்சி தலைவர் ச. கந்தசாமியிடம் தங்களின் கோரிக்கைகளை மனுக்களாக வழங்கி வருகின்றனர்.